முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண்.261/2020

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சண்முகசுந்தரம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தங்கவேலு | கிராமம் | : | |
| வயது | : | தாலூக்கா | : | |
| நாள் | : 20-11-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவாச் சொத்து என் தாத்தா சுப்பன்செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்து என்றால் சரிதான். என் தாத்தா காலமான பின்னிட்டு வாரிசு அடிப்படையில் தான் தாவா சொத்துக்கள் என் அப்பா மற்றும் அத்தைக்கு பாத்தியம் என்றால் சரிதான். என் அத்தைகள் பணம் பெற்றுக் கொண்டு என் அப்பாவுக்கும் என் பெரியப்பாவிற்கும் விடுதலை கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். அந்த சொத்தை என் அப்பாவும் பெரியப்பாவும் பாகம் பிரித்துக் கொண்டார்கள். தாவாச் சொத்து என் அப்பாவிற்கு வாரிசுப்படி பாத்தியம் என்றால் சரிதான்.

2. நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் எனக்கு காலில் அடிப்பட்டதால் சேலத்தில் பஞ்சபூரணி என்பவர் வீட்டில் வசித்து வருகிறேன். செல்வி எனக்கு என்ன உறவு என்றால் என் அக்கா ஆவார். தாவாச் சொத்தை நான் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் போட்டு பார்த்தேன். அதில் என் அண்ணனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். என் அப்பாவே தான செட்டில்மெண்ட் கொடுத்த விவரத்தை சொல்லி உள்ளார்.

3. தாவாச் சொத்தை கிரயம் பெற்றபோது பட்டா என் அண்ணன் வாதி பெயரில் மாறி இருந்தது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல்

சொத்தை என் அண்ணன் மிரட்டி வாங்கியதாக சொல்லப்பட்டதை நானோ, என் அப்பாவோ காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. நான் கிரயம் பெற்றபோது சொத்தின் மதிப்பு என்ன என்றால் ரூ.27 லட்சம் இருக்கும். நான் சொத்தை கிரயம் பெறும்போது என் அப்பா நல்ல மனநிலையில் இருந்தார் என்றால் சரிதான். ஆனால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவருக்கு என்ன பிரச்சினை என்றால் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்திருந்தார்.

4. கதவு எண் 55, வெங்கடேசாபுரம் என்ற முகவரியில் உள்ள வீடு யாருடையது என்றால் என் பெரியம்மா வீடுஆகும். எனக்கும் என் அப்பாவிற்கும் ஏற்பட்ட பிரச்சினையால் தான் என் பெரியம்மா வீட்டில் நான் இருந்தேன் என்றால் சரியல்ல. தற்போது அந்த வீட்டிலும் இல்லை. சேலத்தில் இருக்கிறேன் என்றால் காலில் அடிபட்டதால் நான் சேலத்தில் உள்ளேன். மேற்கண்ட முகவரியில் நான் குடியில்லை சேலத்தில் தான் சிகிச்சை பெற்று வருகிறேன் என்றால் சரிதான்.

5. என் சகோதரிக்கு திருமணத்தின் போது சீர் வரிசைகள் மற்றும் நகை எல்லாம் போட்டு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். பாண்டியன் நகரில் என் சகோதரி பெயரில் ஒரு மனையிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவாச் சொத்தை என் அப்பா நல்ல மன நிலையில் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் அந்த சொத்தை நானும் என் சகோதரியும் ரூ.4 லட்சத்திற்கு கிரயம் பெற்றதாக பொய்யாக எதிர்வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை என் அப்பா என் அண்ணனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த அன்றே சொத்தின் சுவாதீனமும் கொடுக்கப்பட்டு பட்டாவிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.11.20 14:57:28 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.